பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 21உ (5—7—67) புதன் ★ வெளியூர்: ஆனி 22உ (6—7—67) வியாழன் [இதழ்: 18

தீ விபத்து—சதித் திட்டமா?

'பீதிகொள்ள வேண்டாம்' என அறிவிப்பு

குடிசைப் பகுதிகளில் தீவிர போலீசுக் கண்காணிப்பு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலமைச்சர் அண்ணா கூறும் ஆறுதல்மொழி

சென்னை, ஜூலை 5—

சென்னை நகரில் கடந்த நான்கு நாட்களாகத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் தீவிபத்துக் குறித்து விவாதிப்பதற்காக இன்று, சட்டமன்றத்தின் பிற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி, எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமனும், தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானமும் தனித் தனியே தீர்மானம் கொண்டுவந்தனர்.

கருத்திருமன்

திரு. கருத்திருமன் தமது தீர்மானத்தை வற்புறுத்திப் பேசுகையில், தொடர்ந்து இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், நேற்று நடந்த தீவிபத்தை அணைக்கச் சென்ற தீயணைப்புப் படையினர் சாவியை எடுத்துவர மறந்துவிட்டதால் மீண்டும் திரும்பிச் சென்று சாவியை எடுத்துவர ஒரு மணி நேரமாகிவிட்டபடியால் பல வீடுகள் தீயிலிருந்து காப்பாற்றப்பட முடியாமற்போய்விட்டன என்றும், பாதிக்கப்பட்டோருக்கு அரசு கொடுக்கும் நிவாரணம் குறைந்தது ரூ. 100 அளவுக்காவது இருக்கவேண்டும் என்றும் கூறினர்.

ம. பொ. சிவஞானம்

திரு. ம. பொ. சிவஞானம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"முதல் தேதியிலிருந்து நேற்று வரை தொடர்ந்து நாள்தோறும் தீ விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. மொத்தம் சிறியதும் பெரியதுமாக 10 தீ விபத்துக்கள் நடந்திருக்கின்றன. இவற்றில் 4 பெரிய விபத்துக்கள் ஆகும். 4 பேர் உயிர் இழந்திருக்கின்றனர்.

அவற்றில் 3 விபத்துக்கள் எனது தியாகராயநகர்த் தொகுதியில் நடந்திருக்கின்றன. நூற்றுக் கணக்கானோர் வீடிழந்து தவிக்கின்றனர்.

இதற்குப் பின்னாலே ஏதேனும் சதித் திட்டம் இருக்குமோ என அஞ்சப்படுகிறது.

குடிசைவாழ் மக்கள் பீதியடைந்து இரவு நேரங்களில் குடிசைகளிலிருந்து சாமான் செட்டுகளுடன் வெளியேறி வெளியிலே படுத்துக்கொள்கின்றனர்.

"இதில் சதித் திட்டம் எதுவும் இல்லை" என்று காவல்துறையினர் அறிவித்துள்ளனர். அது மட்டும் போதாது; உடனடியாக ஆராய்ந்து அதிகாரபூர்வமாக அறிக்கை வெளியிட வேண்டும்.

குடிசைப் பகுதிகளின் உள்ளே தீயணைப்பு எஞ்சின் புகமுடியாத அளவுக்குக் குடிசைகள் குறுக்கும் நெடுக்குமாக அமைக்கப்பட்டிருப்பதால்தான் மேலும் பல குடிசைகள் தீயிலிருந்து காப்பாற்றப்பட முடியாமல் போகின்றன.

குடிசைகளை நல்ல பாதை அமைப்புக்களுடன் கட்டியிருந்தால் இவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்க முடியாது. இனியமைக்கப்படும் குடிசைகளையாவது போதுமான பாதை வசதிகளுடன் அமைக்க ஆவன செய்யவேண்டும்.

பாதிக்கப்பட்டோருக்கு பல்வேறு முனைகளிலிருந்து நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் அரசே பொறுப்பேற்று ஒருமுகப்படுத்த வேண்டும்.

இந்தத் தீ விபத்துக்களுக்குப் பின்னே சதித் திட்டம் இல்லையென்றால், மகிழ்ச்சி; அப்படி ஏதேனும் இருக்குமேயானால் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்."

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அண்ணா அவர்கள் இதற்கு விளக்கமளித்துப் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"நகரில் சில நாட்களாகத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் தீ விபத்துக்கள், எல்லா மக்களையுமே வெகுவாக வாட்டிவருகிறது. ஏழைஎளியோர் பாதிக்கப்பட்டுள்ளனர்; சிலர் உயிரையும் இழந்துள்ளனர். இதனைக் குறித்து நாம் அத்தனைப்பேருமே வேதனைப்படுகிறோம் என்பதை மக்களுக்கு உணர்த்தவும், தேவையான நிவாரணங்களை அளிக்கவுமே இத்தகைய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

நாம் தனித்தனியாகவோ கூட்டாகவோ, மேற்கொள்ளும் முயற்சிகளின் மூலமே வெகு துரிதமாக நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

திரு. ம. பொ. சி. கூறியபடி, நிவாரண வேலைகளை ஒருமுகப்படுத்தி அரசுமூலம் நடவடிக்கை எடுக்கலாம் என்ற யோசனை கவனிக்கத் தக்கது.

இதில் ஏதேனும் சதித் திட்டம் இருக்குமோ என்று எண்ணிப் பார்ப்பதற்குக்கூடக் கூச்சமாக இருக்கிறது. அந்த அளவுக்குச் சமுதாயத்தில் சீர்கேடான மனிதர்களும் இருக்கக்கூடும் என்று என்று ஒப்புக்கொள்ளுவதற்கே கூச்சமாக இருக்கிறது.

அப்படிப்பட்ட சமூகவிரோதிகளும் இருப்பார்களேயானால், அவர்களை ஒரு துளியும் தயவு தாட்சண்யமின்றித் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சதித் திட்டம் இருக்கலாமோ' என்ற பீதிதான் பரவியுள்ளது; திட்டவட்டமாக முடிவு செய்து கூறப்படவில்லை. போலீசார் ஏழை எளிய மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளுக்குச்சென்று 'பீதிகொள்ளவேண்டாம்' என்று ஆறுதல்மொழி கூறி வருகின்றனர்.

குடிசைப் பகுதிக்குள், முன் பின் பழக்கமில்லாத நபர் யாரேனும் வந்தால் உடனடியாகப் போலீசுக்குத் தகவல் தரும்படி குடிசைவாழ் மக்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும், உடையணியாத போலீசார் குடிசைப் பகுதிகளைச்சுற்றி வந்து கண்காணித்துக்கொண்டிருக்கின்றனர். மேலும் காவல் துறை, போதுமான அக்கறையோடு பணியாற்ற சுறுசுறுப்பாக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன், தீயணைப்புப் படையினர் சாவி இல்லாமல் வந்ததாக குறிப்பிட்டார்; அவர் யார்—எந்த எஞ்சினில் அவர் வந்தார்—என்ற விபரம் தரப்படுமானால், அப்படி வந்தவரைக் கண்டித்துத் திருத்த அரசு தயாராக இருக்கிறது. யாரோ சொன்னதாகக் கேள்விப்பட்ட செய்தியைக் கூறினால் தக்கநடவடிக்கை எடுக்க இயலாமற் போய்விடும்.

மிக நெருக்கமாகக் குடிசைகள் கட்டியிருப்பதால்தான் தீவிபத்துக்களின் அளவும் தன்மையும் அதிகப்படுகின்றன. எனவே, சுறுசுறுப்பாகத் தீயணைக்க மேலும் என்னென்ன புதிய சாதனங்கள் தேவையோ அவற்றையெல்லாம்கூட ஏற்படுத்தித் தர அரசு தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடிழந்த மக்களுக்கு 100 ரூபாய் அளவுக்காவது உதவியளிக்க வேண்டும் என்று திரு. கருத்திருமன் கேட்டுக்கொண்டார். அவரும் சேர்ந்து இருந்த முந்திய அரசினரே கொடுத்துவந்த நிவாரணம், குடிசை கட்டிக் கொள்வதற்கு ரூ. 30-ம், துணிமணிகளுக்காக ரூ. 10-ம்தான். சென்ற வாரத்தில்தான் இந்த அரசு குடிசை கட்டிக்கொள்ள ரூ. 60-ம், துணிமணிகளுக்காக ரூ. 20-ம் கொடுக்கவேண்டும் என்று முடிவெடுத்திருக்கிறது. இதைப்பற்றி யூகித்துத்தான், ரூ. 100 என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் கூறினர் என்றால், அவருடைய சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன்.

'இந்த 100 ரூபாயும் போதாது" என்பதுதான் இந்த அரசின் கருத்து. பொது மக்களும், பொதுநல நிறுவனங்களும் தாராளமாக உதவியளிக்க வேண்டும்.

இதற்காக இந்த அவையை ஒத்திவைத்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்பதைவிட, மீதி நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் கருத்தோடு பாடுபடுவோமேயானால் நமது நோக்கத்தை நிறைவேற்ற முடியும்; ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்."

ம.பொ.சி.:—"நமது முதலமைச்சர் அவர்கள் தங்க உறுதிமொழியும் விளக்கமும் அளித்துள்ளதால், எனது தீர்மானத்தை வற்புறுத்தவில்லை."

டி. எஸ். ஆதிமூலம்:—"பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலாவது ஒரு மணிநேரம் சபையை ஒத்திவைத்துவிட்டுப் பிறகு ஆரம்பித்து நடத்தும்படிக் கேட்டுக் கொள்கிறேன்."

"அண்ணா:—"தீ விபத்து நடந்த இடத்திலுள்ளவர்களே, இப்போது வழக்கமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். அந்த இடத்துக்கு வெகு தொலைவில் கூடியுள்ள நாம் சபையைக் கலைத்து அனுதாபம் காட்டுவதைவிட, இரண்டு மணி நேரம் சபையை நடத்திவிட்டுப் பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் அங்கு சென்று ஆறுதல் கூற முன்வருவார்களேயானால் அவர்களைப் பின்தொடர நான் காத்திருக்கிறேன்."

துணை அவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன், இது குறித்துத் தமது தீர்ப்பை அளிக்கையில், கூறியதாவது:—

"முதலமைச்சர் நல்ல விளக்கம் கூறிவிட்டபடியாலும், இன்று போலீசு மான்யத்தின் மீது விவாதம் நடைபெற இருப்பதால் அதிலும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருப்பதாலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை நான் ஏற்க மறுக்கிறேன்."

சென்னை தீவிபத்து

தி. மு. க. தலைமை நிலைய உதவி

சென்னை, ஜூலை 4—

சென்னையில் ஏற்பட்ட தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையச் சார்பில் ரூ. 3,000 அளிக்கப்படுவதாக பொருளாளர் மு. கருணாநிதி இன்று அறிவித்தார்.

★

எம். ஜி. ஆர். நிதியுதவி

சென்னை, ஜூலை 4—

சென்னை குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீவிபத்துக்களினால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள், சென்னை நகரில் தெருத் தெருவாகச் சென்ற நிதி திரட்ட முடிவு செய்துள்ளார்.

கழகத் தோழர்களுடன் அவரும் ஈடுபடும் இந்நிகழ்ச்சி 8-7-67-ல் நடக்கும் என அறிவித்தார்.

இந்த நிவாரண நிதிக்கு எம்.ஜி. ஆர். அவர்களே ரூ. 25,000 அளித்து இந்நிதியைத் துவக்கி வைத்துள்ளார்.

★

மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 4—

"சென்னை நகரில் தொடர்ந்து நடந்துவரும் தீவிபத்தின் காரணமாக— இவ்விபத்துக்களில் ஐயுறத்தக்க அம்சம் ஒன்று இருப்பதாகக் கருதப்படுவதால் குடிசைப் பகுதிகளிலே இருக்கும் கழகத் தோழர்கள் இரவு நேரங்களில் ஊர்க்காவல் படையினர் போல் விழிப்பாக இருக்கவேண்டும்"

என்று, சென்னை மாவட்ட தி. மு. க, செயலாளர் நீலநாராயணன் ஓர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அரசு ஊழியர் ஊதிய உயர்வு

தமிழக அரசு நிலை குறித்து அண்ணா

சென்னை, ஜூலை 5—

தமிழக அரசு ஊழியர்களின் ஊதியத்தை மறு ஆய்வு செய்ய ஊதியக்குழு ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும், மத்திய அரசு ஊழியர்கட்குக் கொடுக்கப்படும் நகர வீட்டு வாடகைப் படிக்கு ஒப்ப மாநில அரசு ஊழியர்கட்கும் நகர வீட்டுப் படியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், அரசிதழ் பதிவு பெறாத அரசுப் பணியாளர்களுக்குச் சம்பளத் தொகையையும் மற்ற ஊதியத்தையும் இந்த ஆண்டு உயர்த்தும் எண்ணம் இல்லை என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று சட்டமன்றக் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பல துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் கூறியதாவது:—

விலைவாசி ஏற்றத்துக்கு முழுப் பொறுப்பையும் மத்திய அரசே ஏற்கவேண்டும் என்று இந்த அரசு மத்தியஅரசிடம் வற்புறுத்திக்கேட்டுக்கொண்டுள்ளது. நகர வீட்டுப் படியை உயர்த்தும் திட்டம்பற்றி மத்திய அரசிடம் விவாதிக்கும்படி நமது சட்ட அமைச்சரிடம் கூறியுள்ளேன். நமது சிக்கலை இன்னொருவரின் மூலம் தீர்த்துக்கொள்வது என்றாலே காலதாமதம் ஏற்படத்தான் செய்யும்.

மத்திய அரசு ஊழியர்கட்கும்— மாநில அரசு ஊழியர்கட்கு மிடையேயுள்ள சம்பள வேறுபாட்டை நீக்கிச் சமப்படுத்தும் முயற்சியில் இந்தியாவிலேயே நம்முடைய மாநில அரசுதான் மிக்க துரிதமாகவும், அக்கறையோடும் செயல்பட்டுவருகிறது.

மாநில அரசு ஊழியர்கட்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டியது பற்றியும், விலைவாசி உயர்வு பற்றியும் உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் மத்திய அரசிடம் இந்த அரசு எடுத்துக் கூறி வற்புறுத்தியுள்ளது.

அரசு ஊழியர்கட்கு எந்த அளவு வசதியளிக்க முடியுமோ அந்த அளவுக்கு வசதியளிக்க இந்த அரசு அக்கறையோடு எந்த நேரமும் பாடுபடும்.

அரசு ஊழியர்கட்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. உரிய நேரத்தில் உரிய முறையில் நிறைவேற்றப்படும்."

கணக்குப் பார்க்க இதுவல்ல காலம்!

'புதுமையில்லை-புரட்சியில்லை' என்போரே கேளீர்!

'நாங்கள் ஆளத் தகுதியற்ருேர்' என்ற எண்ணத்தை வளர்த்துக்கொண்டீர்!

எதிர்க் கட்சியினருக்கு அண்ணு அறிவுறுத்தல்

"'நீங்கள் ஆளத் தகுதியுள்ளவர்கள்' என்பதை ஒப்புக்கொண்டு என்னுடைய அரசியலை நடத்திக்கொண்டு இருந்தேன்!

"நாங்கள், 'ஆளத் தகுதியற்றவர்கள்' என்று நீங்கள் மனத்தில் எண்ணத்தை வளர்த்துக்கொண்டு விட்டீர்கள்! அதை மாற்றிக்கொள்ளக் கொஞ்சநாள் ஆகும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், தமிழகச் சட்ட மன்றத்தில், இன்று எதிர்க் கட்சியாக வீற்றிருக்கும் காங்கிரசுக் கட்சியினரைப் பார்த்துக் கூறினுர்கள்.

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில், 27—6—67 அன்று அறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதி இங்கு தரப்பட்டுள்ளது; முழு உரையும் தொடர்ந்து பகுதி பகுதியாக வெளியிடப்படும் :—

அக்கறை செலுத்துவர் என்பதில் ஐயமில்லை!

சட்டமன்றத் தலைவர் அவர்களே! முதன்முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அரசின் சார்பில் நிதி நிலை அறிக்கை இந்த மன்றத்தின் முன்னுல் வைக்கப்பட்டதை இந்த மன்றத்திலேயுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மிக அக்கறையோடு கவனித்து இருக்கிருர்கள் என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அவர்கள், பல்வேறு வகையான கருத்துக்களை எடுத்துச் சொன்ஞர்கள்; என்ருலும், 'இது யாரும் கவனிக்கத்தக்க நிதி நிலை அறிக்கை இல்லை' என்று அவர்கள் அலட்சியப்படுத்தி விடவில்லை என்பதில் எனக்கு முதல் மகிழச்சி.

அதிலும். 'இதிலே புதுமையும் இல்லை — புரட்சியும் இல்லை' என்று சொல்லுகின்ற அளவுக்கு உள்ள நிதி நிலை அறிக்கை விவாதத்தில் 120 உறுப்பினர்களுக்குமேல் கலந்துகொண்டு, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிகப் பெரிய அளவுக்கு விளக்கங்களைத் தருவதற்கு அது தூண்டுகோலாக இருந்ததென்ருல், இன்னும் அதிகமான புதுமையும் புரட்சியும் புகுத்தப்படக்கூடிய நிதிநிலை அறிக்கை வரும் நேரத்தில், இன்னும் அதிக உறுப்பினர்கள் அதிக அளவுக்கு அக்கறை எடுத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

உவமைகளை உரிய முறையில் பயன்படுத்தினரா?

கடைசியாகப் பேசிய விஷயத்தை முதலாவதாக எடுத்துக் கொள்கிறேன்.

கடைசியாகப் பேசியது என்ருல், அவர்கள் இப்போது குறிப்பிட்டார்களே — 'சீரணிப் படை'— அதைப் பற்றி முதலிலே எடுத்துக் கொள்கிறேன்.

அதிலே, நான் சொன்ன கதையை அவர்கள் எடுத்துச் சொல்லி, 'அதைப்போல் நடந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று சொன்ஞர்கள்.

'அந்தக் கதையைச் சொன்னவன்' என்ற முறையில்—'அந்தமுறையிலே நடந்துவிடாமல் பார்த்துக் கொள்ள முடியும்' என்ற நம்பிக்கையின்பேரிலேதான் இந்தச் சீரணி அமைக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் சொன்ன கதைகள்-சொன்ன உவமைகள்—நான் காட்டிய வாதங்கள்—நான் சொன்ன புள்ளி விவரங்கள் — இவைகளெல்லாம் ஒரு காலத்தில், மேற்கோளாக வரும் என்று நான், உள்ளபடி எண்ணியதே இல்லை.

அந்த அளவுக்கு நீங்கள் என்னுடைய உரைகளை மிகக் கவனமாகப் பார்த்துக்கொண்டுவருவதற்கு நான் மிகுந்த நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக என்னுடைய கதைகளை—என்னுடைய உவமைகளை—வாதங்களை — புள்ளி விவரங்களை என்னுடைய கட்சிக்காரர்களும், என்னிடத்தில் அன்புகொண்ட நாட்டு மக்களும்தான் பார்க்கிருர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்; நீங்கள் இவ்வளவு அக்கறை வைத்துப் பார்ப்பதை— நான் வேடிக்கையாகச் சொல்கிறேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்—இவ்வளவு பெரிய சீடகோடிகள் கிடைப்பார்கள் என்று நான் முன்னுலே எண்ணியதே இல்லை.

ஆனுல் இதிலே நான் சொன்ன கதைகளையும்— உவமைகளையும் வாதங்களையும் புள்ளிவிவரங்களையும் தக்க முறையில் அவர்கள் பயன்படுத்தியிருப்பார்களாஞல், இன்னும் அதிக மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

சூழ்நிலையைக் கவனிக்கவேண்டாமா?

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னுலே ஜில்லா போர்டு தேர்தலில் பிரசாரம் செய்வதற்காக நான், என்னுடைய கல்லூரி நண்பர் ஒருவரை அழைத்துக்கொண்டு திருவண்ணுமலைப் பகுதிக்குப் போயிருந்தேன்; ஒருநாள் மாலை சுற்றுப் பிரயாணம் தொடங்கியது; கடைசிக் கூட்டம் நடக்கும்போது இரவு 12-மணிக்குமேல் இருக்கும்; ஒரு சிறு கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில்— கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் பாதித் தூக்கத்தில் இருந்தார்கள்.

நான் அவர்களைப் பார்த்துப் பேசுகிற நேரத்தில் சோன்னேன்—'நீங்களெல்லாம் பாதித் தூக்கத்தில் இருக்கிறீர்கள்; உங்கள் தூக்கத்தைக் கெடுப்பதற்கு மன்னிக்க வேண்டும்; நீங்கள் பாதித் தூக்கத்தில் இருக்கிற நிலையில் அதிகம் பேசுவது அவ்வளவு பொருத்தமா என்று யோசிக்கிறேன்' என்று பேசினேன்.

என்னேடு வந்த கல்லூரி நண்பர், என்னேடு இருந்து பேசுவதற்குப் பழகவேண்டுமென்று வந்தவர்; அவர், என்னேடு இருந்த இன்னெருவரிடம் போய்க் கேட்டிருக்கிருர்—'எப்படிப் பேசினுல் நன்ருக இருக்கும்' என்று; அவர் சொன்ஞர்—'அண்ணுதுரை என்னென்ன பேசுகிருர் என்று குறித்து வைத்துக் கொள்; மறு கூட்டத்தில் அதைச் சொல்லிவிட்டால் போதும்' என்று.

அதை அந்த நண்பர் அப்படியே பின்பற்றி—மறுநாள் மாலை 6-மணிக்கு ஒரு கூட்டம் நடந்தது—அந்தக் கூட்டத்தில் நான் இரவு 1-மணிக்குச் சொன்னதையே சொன்ஞர்—'நீங்களெல்லாம் பாதித் தூக்கத்தில் இருக்கிறீர்கள்; நீங்கள் எல்லாம் விழித்துக் கொள்ளவேண்டும்; உங்களையெல்லாம் கஷ்டப்படுத்துவதற்கு நான் வருத்தப்படுகிறேன்' என்றெல்லாம் சொன்ஞர்.

மக்கள், நான் சொன்னபோது எவ்வளவு உருக்கம் அடைந்தார்களோ அவ்வளவு உருக்கம் அடையாததைப் பார்த்து, பேசியவருக்கு ரொம்ப வருத்தம்; திரும்பி வந்து, அந்த நண்பர் கேட்டார் —'அண்ணுதுரை சொன்னதைத்தான் நான் சொன்னேன்; மக்கள், அவர் சொன்னபொழுது உருக்கமாகக் கவனித்ததுபோல் கவனிக்காமல், கேலியாகச் சிரித்தார்களே —காரணம் என்ன?' என்று.

அதைப்போல கனம் உறுப்பினர்கள், நான் சொன்னதை எந்த நேரத்தில்—எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்பதைக் கவனிக்காமல்—என்னுடைய பழைய கல்லூரி நண்பர் செய்ததைப்போல்—இந்த மன்றத்தில் திருப்பித்திருப்பிச் சொன்ஞர்கள். ஆகையினுல், என்னுடைய கதைகளை--உவமைகளைப் படித்தது மட்டுமல்லாமல், அது எந்த இடத்தில் சொல்லப்பட்டது-எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது என்ற இரண்டாவது பாடத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வேடிக்கைக்கேயன்றி வேறெதற்குப் பயன்படும்?

இன்னும் ஒன்று; வழக்கு மன்றங்களில் சொல்வார்கள்— 'உண்மை; முழு உண்மை; உண்மையைத் தவிர மற்றது சொல்வதில்லை' என்று சொல்லி விட்டுத்தான் வழக்கு மன்றங்களில் வழக்குகளை நடத்துவார்கள்.

அதைப்போல், நான் சொன்னதிலேயே முழுப் பகுதியை முழு அளவிலே எடுத்துச் சொல்லி —அநியாயமா இல்லையா என்று பார்த்தால்தான், உண்மையான பொருள் விளங்கும்.

நான் முன்னுலேகூட இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன் —எதிர்த்தரப்பிலே இருந்த பொழுது—நண்பர் கருத்திருமன் அவர்களுக்குத் தெரியும்.

இராமாயணதிதிலிருந்து 5, 6 வாக்கியங்களை மட்டும் எடுத்து இராமாயணத்துக்கு வேறு மாருகக் கதை சொல்லமுடியும்-அசோக வனத்தில் சீதை அமர்ந்திருந்தாள்; இராவணன் அவளைப் பார்த்து, 'உன்னிடத்தில் எனக்கு மையல் வந்துவிட்டது' என்று சொன்ஞன்; ராமன், 'ஆகா' என்று சொன்ஞர்; இலட்சுமணன், 'அப்படியே ஆகட்டும் அண்ணு' என்று சொன்ஞர்.

இவைகளெல்லாம், இராமாயணத்தில் உள்ள வாக்கியங்கள்; தனித்தனியாக வெவ்வேறிடத்தில் உள்ள வாக்கியங்கள்; இவைகளெல்லாம் ஒன்ருக இணைத்து 'இதுதான் என்னுடைய இராமாயணம்' என்று யாராவது சொல்வார்களேயாஞல், அது எவ்வளவு பொருத்தமற்றது?

அதைப் போலவே, நாங்கள் சொன்னவற்றில் இங்கும் அங்குமாக ஒன்றை ஒன்றை எடுத்து —அதை இணைத்து, 'நீங்கள் வரியே போடாமல் ஆளுவதாக சொன்னீர்களே —இப்பொழுது வரிபோடுகிறீர்களே' என்று கேட்பது, நான் சொன்ன அந்த வேடிக்கை இராமாயணத்துக்குச் சமமாக இருக்கும்!

வார்த்தையை நீக்கி வாதிடுவதில் பயன்?

இந்த மனறத்தில் முதன் முதலில் நான் அமர்ந்த நேரத்திலேயே சொன்னேன்—"நாங்கள்எதிர்த்தரப்பிலே இருந்தாலும், 'எதிர்த்தரப்பிலே கடைசி வரையிலும் இருக்கப்போகிருேம் என்ற எண்ணத்தோடு இங்கே வரவில்லை; என்றைக்காவது ஒருநாள் பொறுப்பேற்றுக் கொள்கிற நாள் வரும்' என்ற பொறுப்பு உணர்ச்சியுடன்தான் நான் பேசுகிறேன்; வரியே போடாமல் ஆட்சி நடத்தவேண்டும் என்று குறிப்பிடமாட்டேன்; போடுகிற வரியை போடத்தக்க இடத்தில் — போடவேண்டிய முறைப்படி போடவேண்டும்; அப்படிப் போட்டுப் பெறுகின்ற வரிப் பணத்தை தக்கமுறையிலேயே செலவழிக்கவேண்டும்: 'வரியே போடாமல் ஆட்சி நடத்தலாம்' என்று நாங்கள் சொல்லவில்லை" என்று குறிப்பிட்டேன்.

இதைப்பற்றி நான் என்னுடைய முதல் பேச்சிலேயே சட்டமன்றத்தில் சொன்னேன்; பொதுக்

(3-ம் பக்கம் பார்க்க)

விலைவாசி அறிவிப்பை நிறுத்திவிட மாநில அரசு கோரிக்கை

'வானெலி' இயக்குநருக்குக் கடிதம் எழுதிப் பல மாதங்களாகியும் நடவடிக்கை இல்லை

சட்டமன்றத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் தகவல்

சென்னை, ஜூலை 4—

அனைத்திந்திய வானெலி அறிவிக்கும் விலைகள், மார்க்கெட் விலைகளுக்கு மாறுபட்டிருப்பது உண்மைதான் என்றும், எனவே இந்த அறிவிப்பை நிறுத்திவிடுமாறு இந்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருப்பதாகவும், இன்று சட்டமன்றத்தில் உணவு அமைச்சர் திரு. மதியழகன் அறிவித்தார்.

துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது :—

"நாணய மதிப்புக் குறைப்பையடுத்துத் திடீரென விலைவாசிகள் உயர்த்தப்பட்டதன் காரணமாக மத்திய அரசுக்குத் தோன்றிய அற்புத யோசனையின் விளைவுதான், வானெலி மூலம் விலைவாசி அறிவிக்கும் இந்த ஏற்பாடு.

"புள்ளிவிவரத்துறை சேகரித்துக் கொடுக்கும் விலைப் பட்டியலைத்தான் வானெலி அறிவிக்கிறது.

"புள்ளிவிவரம் சேகரிக்கும் நேரத்திற்கும்—அதனை அறிவிக்கும் நேரத்திற்கும் இடையே விலைவாசிகளில் மாறுதல் ஏற்பட்டுவிடுகிறது. எனவே இதனை அறிவிப்பதை நிறுத்திவிடுமாறு பல மாதங்களுக்கு முன்பே, அனைத்திந்திய வானெலியின் டைரக்டர்-ஜெனரலுக்கு மாநில அரசு கடிதம் எழுதியிருக்கிறது. இன்னும் அதுபற்றிப் பதில் வரவில்லை.

வானெலி மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், இதில் மாநில அரசு செய்வதற்கு ஒன்றுமில்லை; மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

'கதரைப் பற்றிச் சிந்திப்பவர்கள் கைத்தொழில் பற்றிச் சிந்திப்பதில்லை'

அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, ஜூலை 3—

"கதரைப் பற்றி அதிகமாகச் சிந்திப்பவர்கள், கைத்தொழில்களைப் பற்றி அவ்வளவாகச் சிந்திப்பதில்லை, கதரைப் பற்றிச் சிந்திப்பவர்கள், கிராமக் கைத்தொழில்களைப் பற்றியும் கவனம் செலுத்தவேண்டும். இந்தத் துறையையும் இலாபகரமான முறையில் நடத்துவதுபற்றி அரசு அதிகமாகச் சிந்தித்துக்கோண்டிருக்கிறது"

என்று, சென்னை சர்வோதயச் சங்கம்-சென்னை கதர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் சார்பில் துவக்கப்பட்ட கதரின் நூதனக் கருவிகள் கண்காட்சியையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மா. முத்துசாமி குறிப்பிட்டார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"அரசியல் கண்ணேட்டத்துடன் கதரை அழித்துவிடவேண்டும் என்பது அரசின் நோக்கமல்ல. கதருக்கு தி. மு. க. அரசு விரோதியுமல்ல. கதர்த் தொழிலை இலாபம் தரக்கூடிய தொழிலாக மாற்ற முடியுமா என்று இந்த அரசு சிந்தித்து வருகிறது.

"நீண்டகாலத்துக்கு நிதி உதவி கொடுத்துக் காப்பாற்றக்கூடிய தொழிலாக இது இருக்கக் கூடாது.

"கதர்த்துறையையும்,கைத்தறித் துறையையும் இணைக்க முடியுமா என்று எனக்கு ஒரு யோசனை தோன்றி இருக்கிறது. இது என்னுடைய எண்ணமே தவிர, அரசின் கொள்கையல்ல."

எகிப்துக்கு உதவுவதில் இரஷ்யாவின் தயக்கம்

இலண்டன், ஜூலை 4—

தாக்குதலைச் சமாளிக்கும் ஆயுதங்களை எகிப்திற்கு அளிப்பதில் தான் சோவியத்து யூனியன் அக்கறை கொண்டிருக்கிறது என்றும் தாக்குதலுக்குப் பயன்படும் எந்த ஆயுதமாயினும் அதை அளிப்பதற்கு முடிந்தவரையில் தாமதம் செய்கிறது என்றும் இங்கு தெரிகிறது.

இஸ்ரேலைப் பழிவாங்க எகிப்து இரஷ்யாவைப் பயன்படுத்துமேயானால், அது அப்பகுதியில் தனது நலன்களுக்கு மாருக முடிந்துவிடும் என்று மாஸ்கோ கருதுவதாகத் தெரிகிறது.

அரசியல் சங்கடம் புதிதாக ஏற்படுவதுடன், 'ஐந்து நாள் போரில்' எகிப்து இழந்த ஆயுதங்களுக்கு மாற்று ஆயுதங்களைத் தருவதற்குக் குறைந்தது 30 கோடிப் பவுன் (சுமார் ரூ. 630 கோடி) செலவாகும் என்றும் எடுத்துக்காட்டப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் எகிப்து—ஈராக்—சிரியா—அல்ஜீரியா முதலிய நாடுகளுக்கு 100 கோடிப் பவுன் மதிப்புள்ள ஆயுதங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்று மதிப்பிடப்படுகிறது; இதில் பாதி எகிப்திற்குச் சென்றதாக நிபுணர்கள் கணிக்கின்றனர்.

அண்மையில் நடந்த போரின் போது எகிப்து 900 டாங்கிகளையும், தானுகச் சுழலும் பீரங்கிகளையும், 7,000 வாகனங்களையும், 700 பீரங்கிகளையும், 200 போர் விமானங்களையும், 50 குண்டு விமானங்களையும் இழந்தது என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

போர் முடிந்ததிலிருந்து எகிப்திற்குச் சுமார் 150 மிக் விமானங்களைச் சோவியத்து யூனியன் அனுப்பியிருப்பதாக மதிப்பிடப்படுகிறது; இருப்பினும் அவை அனைத்தும் நவீன மிக்—21 வகையைச் சேர்ந்தவையன்று. (நேபன்)

நாகை வர்த்தகத் தொழிலாளர் சங்கம்

அமைச்சர் சாதிக்பாட்சா கலந்துகொண்டார்

25—6—67 மாலை 6 மணிக்கு நாகை தேசிய உயர்நிலைப் பள்ளியில் வர்த்தகத் தொழிலாளர் சங்கத் துவக்கவிழா நடைபெற்றது.

சங்கச் செயலாளர் கே. வி. இராமன் அனைவரையும் வரவேற்ருர்.

திரு. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற துவக்கவிழா கூட்டத்தில், திருவாளர்கள் இப்னு ஜமாலுதீன், அனந்தநாராயணன், கே.ஆர்.ஞானசம்பந்தம்எம்.எல்.ஏ. மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை நாராயணசாமி, கோ.செல்வராசு ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இறுதியாக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள், சங்கத்தைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினுர்.

ஏழை மாணவர்கட்கு உதவிப் பணம்

வணிக வைசிய சமூக ஏழை மாணவ—மாணவிகளில் 11-ம் வகுப்பில் படிப்பவர்களுக்குப் புத்தகம் வாங்க உதவிப் பணமும் கல்லூரியில் புகுமுக வகுப்பு பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கு உதவிச் சம்பளமும் கொடுக்க தென்னிந்திய வணிக வைசிய சங்க உபகாரச் சம்பளக் குழு தீர்மானித்திருக்கிறது.

"15—7—67-க்குள் விண்ணப்பத்தாளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று அறிவிக்கப்படுகிறது.

சட்டமன்றத்தில்

நோக்கம் அதுவல்லவே?

கருத்திருமன் :—"தரிசு நிலங்களை வழங்கும்போது அதில் அரசியல் நோக்கம் இருக்கக் கூடாது"

அண்ணு :—"தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றப்பட வேண்டும் என்பதுதான் நோக்கம்; யாரிடத்தில் கொடுக்கப் படுகிறது என்பதல்ல; நாம் நிலம் வழங்குவதில்கூட சில முறைகளைப் பின்பற்றலாம். நிலம் வழங்குவதில் முதலில் ஆதிதிராவிட மக்களுக்கும்—பிறகு பிற்பட்ட சமூகத்தினருக்கும்—அதன்பின் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள்—பிறகு உறவினர்களுக்கும் முறையே சலுகையளிக்கலாம்"

கருத்திருமன் :—"விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் கொள்முதல் விலை அவர்களுக்குக் கட்டுபடியாவது இல்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் யாரையும் துறைமுகத் தொழிலாளியாகவும் அனுப்புவேன்; ஆனுல், விவசாயத்துக்கு அனுப்பமாட்டேன்; அந்த அளவுக்கு அவர்கள் நிலை தாழ்ந்திருக்கிறது; விவசாயிகளுக்கு அதிக விலை தரப்படவேண்டும்"

அண்ணு :—"இப்படி விவசாயிகளுக்கு அரசாங்கம் அதிக விலை கொடுத்து, குறைந்த விலைக்கு விற்கவேண்டும் என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் கூறுவது அவர் ஏற்கனவே, பேசியிருப்பதுபோல் இந்த அரசை திவால் ஆக்குவதற்காகவா?

தன்மானத்துக்கு எதிரான செயலல்ல!

கருத்திருமன் :—"இப்போது மத்திய அரசிடம் கடனையும் வட்டியையும் தள்ளிப்போடும்படி கோரப்படுகிறது; அது நமது சுயமரியாதைக்கு உகந்தது அல்ல"

அண்ணு :—"கடனையோ வட்டியையோ தள்ளிக் கேட்பது என்பது, தன்மானத்துக்கு எதிரான செயலல்ல. இங்கிலாந்து இந்தியாவுக்குக் கொடுத்த கடனை அசலும் வட்டியுமாகத் தள்ளி விடப் பேச்சு நடந்தது; அது வெற்றியும்பெற்றதாகச் செய்தி வந்தது. அதனுல், வட்டியையோ கடனையோ தள்ளிப் போடும்படி கேட்பது சுயமரியாதைக் குறைவான செயல் அல்ல."

கருத்திருமன் :—"அது அந்த நாட்டின் சக்தியையும், பொருளாதார வலிவையும் பொறுத்தது."

அண்ணு :—"அது வேறு பிரச்சினை. ஆனுல், வட்டியைத் தள்ளிப் போடும்படி கேட்பதே சுயமரியாதைக் குறைவான செயல் என்று கூறுவது சரியல்ல. கடன் வாங்குவதும் வட்டி கொடுப்பதும் வாடிக்கைதான். ஆனுல், அந்தக் கடனை நாம் திருப்பித் தரும் வகையில் பயனுள்ள வகையில் செலவழிக்கப்படவில்லை என்பதால்தான் வட்டியைத் தள்ளிப் போடும்படிக் கோருகிறேம்."

அமெரிக்காவிடம் அரபு நாடுகள் பெற்ற உதவி

வாஷிங்டன், ஜூன் 30—

மத்தியகிழக்கிலும்,வட ஆப்பிரிக்காவிலும் உள்ள 14 அரபு நாடுகள் கடந்த மே 31-ந் தேதியுடன் முடிவடைந்த 22 ஆண்டுகளில் 370 கோடி டாலர் பெறுமானத்துக்குமேல் அமெரிக்காவிடமிருந்து பொருளாதார உதவி பெற்றுள்ளன.

இதே காலத்தில் இஸ்ரேல் பெற்ற யு. எஸ். உதவி 108.8 கோடி டாலர்; இது அரபு நாடுகளுக்கு யு. எஸ். வழங்கிய உதவியில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவு.

பஞ்சாயத்து கோர்ட்டு தேர்தல்கள்

28—6—67 காலை 9-மணிக்கு திருவரங்கம் வெள்ளித்திருமுத்தம் பஞ்சாயத்துக் கோர்ட்டு உறுப்பினர்கள் தேர்தல், ரெவினியூ இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசு முன்னிலையில் நடைபெற்றது. 200-க்கு மேற்பட்ட வாக்காளர்கள் கலந்துகொண்டனர்.

கீழ்க்கண்ட கழகத் தோழர்கள் உறுப்பினர்களாகப் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

எஸ். எம். வி. சாமி (நகர தி.மு.க. செயலாளர்), மு. நடராசன், கே. மாரிமுத்து, அங்கப்பன், வ. ல. வரதராசன், மற்றும் டி. ஆர். குருசாமி.

தாராநல்லூர்

திருச்சி தாராநல்லூர் கிராமம் பஞ்சாயத்துக் கோர்ட்டு உறுப்பினர் தேர்தல் 28—6—67 காலை 10-மணியளவில், தேர்தல் அதிகாரி வெங்கட்ராமன் முன்னிலையில் நடைபெற்றது; கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

டி. எஸ். பாலகிருட்டினன், எஸ். கலியபெருமாள், எம். கருப்பையா, எஸ். சுப்பிரமணியம், டி. கந்தசாமி, என். கோவிந்தன, ஏ. அழகிரிசாமி.

திருச்சி

திருச்சி டவுன் பஞ்சாயத்துக் கோர்ட்டு உறுப்பினர்கள் தேர்தல், 28—6—67 காலை 10-மணியளவில் தேர்தல் அதிகாரி சீனிவாசன் முன்னிலையில் நடைபெற்றது; அதுசமயம் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

டி. வி. பரமசிவம் (19-வது வட்ட தி. மு. க. செயலாளர்); எம். வீரபத்திரன் (16-வது வட்ட தி. மு. க. செயலாளர்); டி. எஸ். குஞ்சிதபாதம் (13-வது வட்ட தி. மு. க. செயலாளர்); எம். முத்து (18-வது வட்ட தி. மு. க. செயலாளர்); ஏ. சோமசுந்தரம் (திருச்சி நகர தி.மு.க. முன்னுள் பொருளாளர்); க. சே. சுலைமான் (18-வது வட்ட தி.மு.க. பொருளாளர்); டி. என். இராசரத்தினம்.

தமிழ்நாடு மின் கழக கணக்காயர் சங்கம்

தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கத்தின் கிளைச் சங்கம் (பதிவு எண் : 2472) செங்கற்பட்டு மின் பிரிவில், திருவள்ளூரில் 28—6—67 அன்று ஆரம்பிக்கப்பட்டது. திரு. இராமானுஜாச்சாரி தலைமை தாங்கினுர். திருவாளர்கள் டி. ஆர். வேணுகோபால், ஏ. பாலசந்தர், எம். எஸ். இரத்தினவேலு ஆகியோர் உரையாற்றிய பின் திரு. ச. வெ. அங்கப்பன் (தலைவர்—தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கம்) சங்க நடவடிக்கைகளைப் பற்றியும், இனி சங்கம் மேற்கொள்ளவேண்டிய செயல்களைப் பற்றியும் விளக்க உரை ஆற்றினர்.

பிறகு அங்கப்பன் முன்னிலையில்—இராமானுஜாச்சாரி தலைமையில் கிளைச் சங்க நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது :—

செயலாளர் : ஆர். சானகிராமன்; துணைச் செயலாளர் : கே. முகமது உஸ்மான்; பொருளாளர்: எஸ். கோவிந்தன்; செயற்குழு உறுப்பினர்கள் : டி. வரதராசன், பி. எம். ஜேசுதாஸ், ஏ. உமர், ஆர். லோகநாதன், பி. குலசேகரன், பொதுக்குழு உறுப்பினர் : டி. ஆர். வேணுகோபால்.

அரசினர் போக்குவரத்து-- பொதுத் தொழிலாளர் சங்கம்

அரசினர் போக்குவரத்து ஊழியர்—பொதுத் தொழிலாளர் சங்கத்துக்கு 30—6—67 அன்று நடந்த தேர்தலில், கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். இராகவானந்தம்; துணைத் தலைவர் : பி. சீனிவாசன்; பொதுச்செயலாளர் : கே. சுதர்சனம்; துணைச் செயலாளர் : எஸ். கோவிந்தசாமி; பொருளாளர் : பி. வரதன்.

அண்ணு அறிவுறுத்தல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்களிலும் அதைத்தான் நாங்கள் பேசிக்கொண்டு வருகிறேம்.

அதை எடுத்துவைத்துக்கொண்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள், 'வரியே போடமாட்டேன் என்று சொன்னுயே?' என்று கேட்டார்கள்.

சொன்னேன்; எப்படி?—'ஏழைகளுக்கு' என்ற ஒரு வார்த்தையை நீக்கிவிட்டிருக்கிருர்கள்! 'ஏழைகளுக்கு வரி போடமாட்டேன்; மற்றவர்களுக்கு வரி போடுவேன்; தாங்கக்கூடியவர்களுக்கு வரி போடுவேன்; அப்படிப் போட்டுப் பெறுகின்ற வரிப் பணத்தை தக்க காரியங்களுக்குப் பயன்படுத்துவேன்' என்றுதான் சொன்னேன்.

இவ்வளவையும் வைத்துச் சொன்னுல், உள்ளபடியே நான் சொன்னதைத் திரும்பவும் படித்ததற்குப் பயன் கிடைத்திருக்கக்கூடும்.

அதை விட்டுவிட்டு, நடுவில் எடுத்து, 'வரி போடமாட்டேன் என்று சொன்னீர்களே—இப்பொழுது வரி போடுகிறீர்களே' என்றும், அதிலே கொஞ்சம் தரம் உயர்ந்ததாக எண்ணிக்கொண்டு நண்பர் கருத்திருமன் அவர்கள், 'இப்பொழுதாகிலும் உணர்ந்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்று சொன்னுர்கள்.

'ரொம்ப நாட்களாக அவர்கள் சொல்லிக்கொண்டு வந்தும் எனக்கு விளங்காமல் இருந்தது; இப்பொழுது எனக்கு விளங்கிற்று; அவ்வளவு மந்தச் சுபாவம்' என்ற அளவுக்கு அவர் அது போன்று சொன்னுர்.

'இப்பொழுதாவது உணர்ந்தார்களே' என்ற இம்மாதிரி பேச்செல்லாம்—நான் இதைச்சொல்வதனுல், யாரையும் தவருகச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம்—எனக்கு இவைகளெல்லாம் பாலபாடம்!

ஆகையினுல் நான் சொல்ல விரும்புவது—நாங்கள் சொன்னவைகளுடைய முழுத் தன்மையையும் எடுத்துவைத்துக்கொண்டு, 'இப்படி இப்படிச் சொன்னீர்கள்; இப்படி இப்படி நடந்தீர்கள்' என்று வாதாடுவீர்களேயானுல் உள்ளபடியே அது வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

கணக்குப் பார்ப்பதில் வரைமுறை வேண்டாமா?

இவைகளுக்கு அப்பாலே சென்று ஒன்று சொல்கிறேன். ஒரு கட்சியின் சார்பிலே—அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னுலே—'இன்னதைச் செய்யப்போகிறேம்' என்று அவர்கள் கொடுத்திருக்கிற வாக்குகள் நிறைவேற்றப்பட்டனவா இல்லையா என்பதைக் கணக்கிடுகிற காலம் இதுதான?

அவர்கள் பொறுப்பில் இருக்க வேண்டிய அளவுக்கு இருந்து—தோழர் விஞயகம் அவர்கள், 'ஐந்து வருடங்களுக்கு நீங்கள் இருந்துதான் ஆகவேண்டும்' என்று சொன்னுர்கள்—அப்படி இருக்கவேண்டிய கால அளவிற்கு இருந்து, செய்யக்கூடியவைகளை—நான் பல தடவை இந்த மன்றத்தில் சொன்னபடி — படிப்படியாகச் செய்து, நாங்கள் இறுதியில் அந்தக் காரியங்களில் எதையுமே நிறைவேற்றவில்லையென்ருல், 'நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன? உங்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிற சாதனை என்ன?' என்று அந்த நேரத்தில் கணக்குப் பார்க்க வேண்டும்.

ஆனுல், நீங்கள் கணக்குப் பார்த்தது மார்ச் 7-ந் தேதி; மார்ச் 6-ந் தேதி நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்டோம்; மார்ச் 7-ந் தேதி நீங்கள் கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டீர்கள்.

நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட மறுநாளே, 'என்ன செய்துவிட்டீர்கள்?' என்று கேட்டீர்கள்; 8-ந் தேதி, 'என்ன செய்துவிட்டீர்கள்' என்று இன்னும் கொஞ்சம் அழுத்தமாகக் கேட்டீர்கள்; 10-ந் தேதி, 'என்னதான் செய்தீர்கள்' என்று கேட்டீர்கள்.

இப்படியா கணக்குப் பார்ப்பது? 6-ந் தேதி நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் உட்கார்ந்திருக்கிறேம்—7-ந் தேதியே நீங்கள் கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டீர்கள்!

இது, கணக்குப் பார்க்கும் முறையும் அல்ல—கணக்குப் பார்க்கிற காலமும் அல்ல—உண்மையான கணக்குப் பார்க்கிற தன்மையும் ஆகாது!

வாக்குறுதியை நிறைவேற்றித் தீருவோம்!

ஆதலால், 'திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கிற இந்த அரசு, அதனுல் முடிந்த அளவுக்குத் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் படிப்படியாக முயன்று வரும் என்பதை — நம்முடைய கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னபடி—இந்தப் படி அரிசித் திட்டத்தின் மூலம் ஓரளவுக்கு மெய்ப்பித்திருக்கின்றேம்.

அதைப்போல், பஸ்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தின் கீழ், 'மோட்டார் பஸ் போக்குவரத்து 75 மைல்களுக்கு அப்பால் இருப்பவைகளையெல்லாம் நாட்டுடைமை ஆக்கவேண்டும்' என்ற முறையிலே எங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதிலே அக்கறையோடு நாங்கள் இருககிறேம் என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறேம்.

நில வரியினுல் கஷ்டப்படுகிற மக்களுக்கு—'அந்தக் கஷ்டத்தைக் குறைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்வோம்' என்று நாங்கள் சொன்னதை ஓரளவுக்கு நிறைவேற்றுவதிலே முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேம்!

'ஏழை எளிய மக்கள் கல்விச் சலுகை பெறுவதற்காக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று நாங்கள் சொன்ன தேர்தல்கால வாக்குறுதியை நிறைவேற்றும் முறையில், புகுமுக வகுப்பில் ரூ. 1,500-க்கும் அதற்கும் குறைவான வருமானம் பெறுகின்ற ஏழை எளியோர் குடும்பங்களுக்கு—அவர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் சரி—முற்போக்கு வகுப்பினராக இருந்தாலும் சரி; பின் தங்கிய வகுப்பினராக இருந்தாலும் சரி; யாராக இருந்தாலும்—அவர்களுக்கு அந்த நன்மை ஏற்பட வேண்டும் என்று நாங்கள் அக்கறை காட்டி இருக்கிறேம்.

காலத்தைக் கணிக்க காத்திருக்க வேண்டாமா?

ஆக, நாங்கள் பொறுப்பேற்ற 120 நாட்களுக்குள், எங்களுடைய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் நாங்கள் இந்த அளவுக்கு ஈடுபாடு வைத்திருக்கிறேம் என்பதை அவர்கள் உற்றுக் கவனித்திருப்பார்களேயானுல் — 'இது அல்ல, நாம் முன்னேற்றக் கழகத்தைக் கண்டிக்கக் கூடிய காலம்; இன்னும் அதற்குக் காலம் வரவில்லை' என்று அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் கருதுவதுபோல் — அவர்கள் கருதுவார்கள்.

அவர்கள்கூட காத்துக்கொண்டிருக்கிருர்கள்—எனக்குத் தெரியும்—'எப்பொழுது தவறு செய்கிருர்களோ அப்பொழுது கண்டிக்கலாம்; எப்பொழுது வழி தவறுகிருர்களோ அப்பொழுது கண்டிக்கலாம்' என்று காத்துக் கொண்டிருக்கிருர்கள்! காங்கிரசு எதிர்க் கட்சியினர்களுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டமன்றத்தில் அண்ணா அறிவுரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அளவுக்குப் பொறுத்துக் கொள்கிற தன்மை இல்லை—அவசரம் இருக்கிறது! அந்த அவசரத்திற்கு என்ன காரணம் என்றும் எனக்குப் புரிகிறது!

தவறான எண்ணத்தை வளர்த்துக் கொண்டதால் ஏற்பட்ட விளைவு

இன்றையத்தினம் நம்முடைய நண்பர் திரு. விநாயகம் அவர்களும், திரு. கருத்திருமன் அவர்களும் என்னைப்பற்றி நானே கூச்சப் படுகிற அளவுக்குப் பாராட்டினார்கள்.

அவர்கள் இருவரும் காங்கிரசுக் காரர்கள் மட்டுமல்ல—என்னுடைய நண்பர்களும்கூட! என்னை இந்தச் சட்டமன்றத்தில் அந்த அளவுக்குப் பாராட்டியதற்கு அவர்களுடைய கட்சிக் கூட்டத்தில் அவர்களுக்குச் சில சங்கடங்கள்கூட விளையுமென்று என்னாலே யூகித்துப் பார்த்துக் கொள்ள முடிகிறது.

ஆனால், அவர்கள் என்னை இந்த அளவுக்குப் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றாலும், பொதுவாகப் பெரும்பாலான காங்கிரசுக்கார நண்பர்களுக்கு நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுகிற நிமிடம்வரையில் இருந்து வந்த எண்ணம் என்னவென்றால், நாங்கள் ஆளத் தகுதியற்றவர்கள்; ஆள்வதற்கேற்ற திறமையற்றவர்கள்; ஆள்வதற்கு எங்களுக்குப் பொறுப்புணர்ச்சி இருக்காது—என்ற எண்ணத்தில் தங்களை வளர்த்துக்கொண்டார்கள்.

அது தவறான எண்ணம்; அந்த எண்ணத்தை வளர்த்துக் கொண்டதினாலே, நாங்கள் எதைச் செய்தாலும், 'இவர்கள்தான் தகுதியற்றவர்களாயிற்றே—இது சரியாகத் தோன்றுகிறதே—இது எப்படிச் சரியாக இருக்கமுடியும்? இவர்கள்தான் திறமையற்றவர்களாயிற்றே—இவர்கள் போட்டிருப்பதில் இது பிடித்தமானதுபோல இருக்கிறதே—இது எப்படி பிடித்தமானதாக இருக்கமுடியும்' என்று அவர்கள் ஆராய்கிறார்கள்!

மிகப் பெரிய காங்கிரசுத் தலைவர் ஒருவர், 'நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், நாடு நகரங்களில் பெண்களே வெளியே வரமுடியாது; உலவமுடியாது' என்றார்கள்.

இன்னொரு பெரிய காங்கிரசுத் தலைவர், 'இவர்களா ஆளுகிறவர்கள்—முகத்தைப் பாருங்கள்' என்று சொன்னார்.

இன்னும் சில காங்கிரசுத் தலைவர்கள், 'இந்தப் பக்கம் உதிக்கும் சூரியன் அந்தப் பக்கம் உதித்தாலும் இவர்கள் வரமுடியாது' என்று சொன்னார்கள்! (குறுக்கீடு)

நண்பர் விநாயகம், 'அதெல்லாம் தேர்தல் பேச்சு' என்கிறார்கள்; 'தேர்ந்த பேச்சு-தேர்ந்தெடுத்த பேச்சல்ல' என்றுதான் குறிப்பிடுகிறேன்.

அந்த வகையில் மனத்தை வளர்த்துக் கொண்டிருப்பதால், நாங்கள் எதைச் செய்தாலும், 'அதில் புதுமை இல்லை—புரட்சி இல்லை' என்று சொல்லத் தோன்றுகிறது.

இல்லையென்றால், 'நாங்கள் செய்ததைத்தானே நீங்களும் செய்கிறீர்கள்' என்று சொல்லுகிறார்கள்!

பேச்சில் பொருத்தம் அனைவருக்கும் அவசியம்!

இந்த இரண்டும், 'லாஜிக்'படி எப்படிப் பொருந்திவருகிறது என்று புரியவில்லை!

'ஒன்றுமே செய்யவில்லை' என்று சொல்லிவிட்டு, 'நாங்கள் செய்ததைத்தானே நீங்களும் செய்கிறீர்கள்' என்றால், அதன் பொருள் என்ன?—'இத்தனைக் காலமாக நீங்கள் ஒன்றுமே செய்யவில்லை; நானும் ஒன்றுமே செய்யாமல் இருக்கிறேன்' என்பதுதானே!

கொஞ்சம் ஆத்திரமும் அருவருப்பும் இருந்தாலும், பேச்சில் பொருத்தம் இருக்கவேண்டும் என்பதை கனம் உறுப்பினர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு நேர்மாறாக, நான் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில்—ஆட்சிப் பொறுப்பில் இருந்த காங்கிரசுக்காரர்களையோ, தலைவர்களையோ மதிக்க ஒரு துளியும் தவறியதில்லை!

நண்பர் கருத்திருமன் இடத்தில்—அல்லது இன்னும் பொருத்தமாகச் சொல்லவேண்டுமென்றால் திரு. பொன்னப்ப நாடார் உட்கார்ந்திருந்த இடத்தில் நான் இருந்தேன்; அன்று அரசாண்ட காங்கிரசு அமைச்சர்களை நான் பாராட்டியிருக்கிறேன்; அவற்றை நீங்கள் சட்டமன்ற குறிப்புகளைப் பார்த்தால், விரிவாகக் காணலாம்.

'என்னுடைய மாநிலத்து அமைச்சர்கள் திறமை மிக்கவர்கள்; நிர்வாகம் செய்யத் தெரிந்தவர்கள்' என்றெல்லாம் நான் பாராட்டியிருக்கிறேன்.

அதற்குக் காரணம் என்னவென்றால், 'நீங்கள் ஆளத் தகுதியுள்ளவர்கள்' என்பதை ஒப்புக்கொண்டு, என்னுடைய அரசியலை நடத்திக்கொண்டு இருந்தேன்.

ஆனால் நீங்களோ, 'நாங்கள் ஆளத் தகுதியற்றவர்கள்' என்று மனதில் எண்ணத்தை வளர்த்துக்கொண்டுவிட்டீர்கள்! அதை மாற்றிக்கொள்ள கொஞ்சம் நாள் ஆகும்!

நன்றி உரித்தாகுக!

ஆகையினால், 'குற்றம் குறைகள்' என்று வாதாடுகிறவர்களும்—நண்பர் கருத்திருமன் எடுத்துச் சொன்னபடி—இன்னும் சிறிது நாட்களானால் சரிப்பட்டுப் போய்விடும்!

ஆகையினால், நான் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு என்னைப் பாராட்டியவர்களுக்கு முதலிலே நன்றி தெரிவிக்கின்றேன்.

'இதிலே ஒன்றுமே இல்லை' என்று சொன்னவர்களை — முன்னாலே குறிப்பிட்டுச் சொன்னபடி—இன்னும் கொஞ்ச காலம் பிடிக்கும்—'நீங்கள் வளர்ச்சி பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்'—என்று கூறுகிறேன்.

'என்ன இருந்தாலும், எதிர்ப்போம்' என்று சொல்லக்கூடியவர்கள் யாராவது இருப்பார்களானால், 'வாழ்க உங்கள் வீரம்' என்று வாழ்த்துகிறேன்.

இனி, 'நிதி நிலை அறிக்கையில் வரவேற்கத்தக்கவை இருக்கின்றன' என்று பெரும்பாலான உறுப்பினர்கள்—எந்தத் தரப்பு உறுப்பினர்களானாலும் சரி—ஏற்றுக்கொண்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

[தொடரும்]

காலில் மிதிபடும் புழு-பூச்சிகள் அல்ல மனித உயிர்கள்!

அக்கறையற்ற போக்கில் செயல்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க முயற்சி

சட்டமன்றத்தில் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, ஜூலை 4—

"1966-ம் ஆண்டில் சென்னையில் மட்டும் 863 பஸ் விபத்துக்கள் ஏற்பட்டன. இந்த விபத்துக்களில் 707 பேர் இறந்தனர். மற்ற மாவட்டங்களில் 1,950 பஸ்களும், 2,317 லாரிகளும் 719 டாக்சி—ஆட்டோக்களுமாக 4,986 போக்குவரத்து சாதனங்கள் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. இது சாதாரணமான பிரச்சினையல்ல!

"மனித உயிர்கள் என்பது—சாதாரணமாக நறுக்கி எறியப்படும் காய்கறித் துண்டுகள் அல்ல—காலில் மிதிபடுகின்ற புழு-பூச்சிகள் அல்ல!

"வண்டிகளை ஓட்டுகின்றவர்களும், கண்டக்டர்களும் மனித உயிர்களை அலட்சியம் செய்கின்ற அளவுக்கு அக்கறையில்லாத் தன்மையில் ஓட்டுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இந்த மாதிரிச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

"லாரி விபத்துக்கள் பற்றிச் சொல்லும்போது, 'லாரிகள் இரவில் ஓடுகின்றன. அதனால் விபத்துக்கள் நடக்கின்றன' என்று சொல்லலாம்; ஆனால் பஸ்கள் அப்படியல்ல; ஆகவே பஸ்களை நல்ல பயிற்சி பெற்றவர்கள்—பொறுப்பு உணர்ச்சி உள்ளவர்கள் ஓட்டவேண்டும்"

என்று, போக்குவரத்துத் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் போக்குவரத்துத துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் விளக்கினார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்த அரசு ஆட்சியில் உள்ள வரையில் பேருந்துகளின் கட்டணங்கள் உயராது.

சென்னை நகரப் பேருந்துகளில், 14 காசு—22 காசு—என்று கட்டணம் இருப்பதால், கண்டக்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் தகராறுகள் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, 14 காசு என்று இருக்கும் கட்டணத்தை 15 காசாகவும், 22 காசாக இருக்கும் கட்டணத்தை 20 காசாகவும் மாற்றப்படும்.

இப்புதுக் கட்டண விகிதங்கள், முதலமைச்சர் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் முதல் செயல்படுத்தப்படும்.

பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதால், பாதிக்கப்படும் முதலாளிகளுக்கு வேறு ஏதாவது உதவிகள் செய்யமுடியுமா என்பதை அரசு உறுதியாக ஆய்வு செய்யும்.',

இலட்சக்கணக்கில் அரசினர் பணம் கையாடல்

எஞ்சினீயர் — காண்டிராக்டர் கைது செய்யப்பட்டனர்

மதுரை, ஜூலை 4—

பல இலட்சக்கணக்கில் அரசின் பணத்தைக் கையாடியதாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்தாறு—பட்டினம்கால் திட்டத்துக்கு முன்பு நிர்வாக எஞ்சினீயராக இருந்த டி. ஆர். சுப்பிரமணியன் என்பவர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

இந்தக் கையாடல் சம்பந்தமாக ஏற்கனவே 12 எஞ்சினீயர்களும், காண்டிராக்டர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்

வெற்றி பெறும் வாய்ப்பு

சென்னை, ஜூலை 5—

தென் மேற்கு பருவமழை தீவிரமாகப் பெய்வதால், தமிழகத்திலுள்ள தேக்கங்களில் நீர்மட்டம் மன நிறைவு ஏற்படுத்தும் வகையில் இருந்துவருகிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக அரசினர் உத்தேசித்துள்ள திட்டங்களை அமுலாக்கும் வாய்ப்புகள் தெளிவுமிக்க நிலையில் இருக்கின்றன.

மேட்டூர் தேக்கத்தில் நீர்மட்டம் துரிதமாகச் சீரடைந்து வருவதால் தஞ்சை மாவட்டத்தில் தீவிர உணவு உற்பத்தித் திட்டம் முழு வெற்றியடைவது நிச்சயமாகிவிட்டது.

தொடர்ந்து ஏற்படும் தீவிபத்துக்கள்

'திட்டமிட்ட நாசவேலை'யோ என ஐயம்

வீட்டையும் பொருளையும் இழந்த ஏழைகளின் பரிதாப நிலை

சென்னை, ஜூலை 4—

கடந்த நான்கு நாட்களாகச் சென்னை நகரில் பல இடங்களில் பயங்கரத் தீவிபத்துக்கள் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீட்டையும் பொருள்களையும் பறிகொடுத்து பரிதாப நிலைக்கு ஆளாயினர்.

இவர்களுக்கான நிவாரண வேலைகளில் தமிழக அரசும், மாநகராட்சியும் மற்றும் பொதுநலத் தொண்டர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளையில், இன்று பிற்பகல் 2 மணிக்கு கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள பத்திரிகரைப் பகுதியில் தீவிபத்து ஏற்பட்டு 80 குடிசைகளுக்குமேல் நாசமாயின. தீயணைக்கும் படையினர் 2 மணி நேரம் போராடித் தீயை அணைத்தனர்.

இன்று நள்ளிரவு மூன்றுமணிக்கு மைலாப்பூர் சிலேட்புரத்தில் திடிரென்று தீவிபத்து ஏற்பட்டு 400 குடிசைகள் எரிந்து சாம்பலாயின.

நேற்று தீவிபத்து ஏற்பட்ட மயிலாப்பூர் முண்டக்கணிண்யம்மன் பகுதியிலேயே இன்றும் தீவிபத்து ஏற்பட்டது.

இன்று பகல் 1 மணிக்கு தேனாம்பேட்டை பெரியார் சாலையில் திடிரென்று ஒரு வீடு தீப்பிடித்து எரிந்தது. அந்த வீட்டில் அடுப்புகூட மூட்டப்படவில்லை. ஆகவே, வீட்டிலுள்ளவர்களின் கவனக்குறைவினால் இந்த விபத்து ஏற்படவில்லை.

வீடு தீப்பிடித்தவுடன் கழகத் தோழர்கள் முன்னின்று உடனடியாக அதை அணைத்து, மற்ற பகுதிகளுக்கும் பரவாமல் தடுத்தனர்.

இப்படித் தொடர்ந்து திடீர் திடீரென ஏற்படும் இந்நிகழ்ச்சிகளைப் பற்றி எண்ணிப் பார்க்கையில் இவைகளெல்லாம் 'விபத்துக்கள்' அல்ல—திட்டமிட்டே செய்யப்படும் நாசவேலைதான் என்று கருதப்படுகிறது.

இதைப் பற்றி தீவிபத்து நடந்த இடத்தில் ஒருவர் கூறியதாவது:—

"இந்தப் பகுதியில் தீப்பிடித்து எரிந்தபோது, அடுத்த கோடியிலும் தீப்பிடித்து எரிவதைப் பார்த்தேன்; ஒரே சமயத்தில் தனித் தனியாக நான்கு இடங்களில் தீப்பிடித்து எரிந்ததால் இது நாசவேலையைத் தவிர வேறு எதுவும் இல்லை."

MADRAS STATE ELECTRICITY BOARD
(GENERATION CIRCLE)
Madras Electricity System,
Basin Bridge Power House,
Madras-12

SEALED TENDERS with specification No. and due date superscribed on the envelope are invited upto 3·00 P.M. on the due date mentioned below and will be opened at 3·30 P.M. on the same date in presence of such of the tenders who prefer to be present.

1. Specification No. SEG/BB No. 5/1967—68.
2. Material to be supplied: River sand.
3. Due date: 20—7—67.
4. Earnest Money Deposit: Rs. 250/-
5. Cost of tender documents: Rs. 5.13 (not refundable).

Copy of tender forms can be obtained on payment of Rs. 5.13 either in cash or by Money order only to the Deputy Chief Accountant/Generation, M.E.S. Basin Bridge Power House, Madras-12. The Money order coupon should bear the details of specification No due date and full address of the tenderer. The Electricity Board is not responsible for any loss/delay in transit of the tender sets sent by post. Teaders received late and those not submitted in the prescribed form will be summarily rejected. Tender forms are not transferable.

SUPERINTENDING ENGINEER
(GENERATION)
Madras Electricity System
Basin Bridge Power House,
Madras-12

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

7--7--67

சென்னை 72-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் பாராட்டுக் கூட்டம்; இரவு 7.மணிக்கு நாகப்பையர் தெருவில் (ஸ்டார் டாக்கீசுக்கு அருகில்); தலைவர்: எம். துரைவேலு; பாராட்டுப் பெறுபவர்: சி. சிட்டிபாபு எம்.பி.; பாராட்டுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ., கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., பி. ஆர். நாகராசன் எம்.சி., எஸ். எம். கிருட்டிணன் எம்.சி., கே. சுப்பிரமணியம் எம்.சி., பி. எம். துளசிங்கம், கே. எஸ். பாண்டியன்.

அத்திப்பட்டுகை

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பட்டக்கால் திடலில்; தலைவர்: க. கோவிந்தராசு; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், எஸ். இராமசாமி பி.எஸ்சி., பி.எல்., ப. அ. கரீம், ஏ. அப்துல் முகம்மது, சீ. செயராமன், கோ. சத்தியமூர்த்தி.

குழுக் கூட்டம்

"சென்னை 4-வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 7—7—67 இரவு 8-மணிக்கு கப்பல்போலு செட்டித் தெரு—கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் பி. கே. மூர்த்தி அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13') அச்சிட்டு வெளியிடப்படுகிறது.